மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

15.09.2022 வியாழக்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com

## நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்வு



நிலவிய கொவிட் சூழல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் படைக்கல சேவிதரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் நேற்று (14) அனுமதிக்கப்பட்டது. இதற்கமைய முதற்கட்டமாக பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தைப் பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு அனுமதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய, செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றக் கட்டடத்தொகுதிக்கு வருகைதர அமர்வு அல்லாத நாட்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.00 மணிவரை (விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அனுமதிக்கப்படுவார்கள் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார். கடிதம், தொலைநகல் (0112777473ஃ 0112777335) அல்லது றறற.யசடயைஅநவெ.டம என்ற இணையவழியூடாக இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். பல்கலைக்கழகங்களின் மாணவர் குழுக்கள், அரசின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாம் என படைக்கல சேவிதர் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு மதிய உணவு

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் 18 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு போசனையான மதிய உணவை வழங்க விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் உணவுப் பற்றாக்குறை என்பன பாடசாலை மாணவர்களின் போசாக்கிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால், ஆரம்பக் கல்வி பயிலும் குழந்தைகளின் போஷாக்கை உறுதிப்படுத்தும் வகையில் உணவு வழங்கப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு 27 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக அவர் தெரவித்துள்ளார். பாடசாலை மாணவர்களின் ஒரு வேளை போசனையான உணவுக்காக நாளொன்றுக்கு 82 மெற்றிக் தொன் அரிசி தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும் இந்த அரிசியை சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கபடும் என்றார்.

## பாடசாலைகளுக்கு விடுமுறை

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி பாடசாலைவிடுமுறைதினமாகஅறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, செப்டம்பர் 19 அன்று அரசாங்கத்தால் சிறப்பு விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பாடசாலைகளுக்கும் குறித்த விடுமுறையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அன்றைய தினத்தை விடுமுறை தினமாக கருதி செயற்படுமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாடு பொருளாதார நெருக்கடியில்

# ஜனாதிபதி, ராஜபக்ச குடும்பத்தின் பிணைக் கைதி



இந்நாட்டு மக்கள் மனதில் பொது மக்கள் போராட்டமொன்று எழுந்தது மக்களை ஒடுக்கும் அரசை விரட்டியடித்து விட்டு ஜனநாயக அரசை ஸ்தாபிப்பதாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரக் கொலையாளியான பிரிவினர்களின் தயவில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்துள்ளனர் எனவும், அவர் கூட தற்போது ராஜபக்ச குடும்பத்தின் பிணைக்கைதியாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (15) அம்பாறையில் தெரிவித்தார். மக்கள் போராட்டத்தை தாக்கி பிரதமர் பதவி விலகியதாகவும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூட தேர்தல் காலத்தில் தாக்குதல்களையும் வன்முறைகளையுமே

02

## நீர் கட்டணத்தை செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்கள்

நீர் கட்டணத்தை செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கான நீர் விநியோகத்தை துண்டிக்குமாறு ஆலோசனை கிடைத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை(**NWSDB**) தெரிவித்துள்ளது. நீர் கட்டணங்களை செலுத்தாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை சபாநாயகருக்கு இன்று(15) அனுப்பவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வர்த்தகப் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களால் சுமார் 3 மில்லியனுக்கும் அதிக கட்டணம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அவர் இதன்போது கூறியுள்ளார்.

## இலங்கைக்கு மேலும் நிதியுதவி வழங்க எவ்வித திட்டமுல் இல்லை : இந்தியா

இலங்கைக்கு மேலும் நிதியுதவி வழங்க எவ்வித திட்டமுல் இல்லை என இந்தியா தெரிவித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரை இலங்கைக்கு இந்தியா கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான (**IMF**) ஆரம்பக் கடன் உடன்படிக்கையின் பின்னர் இலங்கையின் நெருக்கடியான பொருளாதாரம் ஸ்திரமடையத் தொடங்கியுள்ள நிலையில் இந்தியா இந்த நிலைப்பாட்டை எடுத்ததாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

## இணையதளம் மூலம் விண்ணப்பிக்க முடியும்

கல்விப்பொது தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு இணையதளத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம்

02

## நீர் ஓடையில் சடலம் மீட்பு



மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளக்கல்லு மலைப்பகுதியில் உள்ள நீர் ஓடையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். குசலானமலை பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சித்திரவேல் சிறிகந்தராஜா வயது (58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்நிலையில, சம்பவ இடத்திற்கு பொலிஸ ார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டவர்கள் சென்று மரண விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலம் செங்கலடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பல்கலை மாணவர்களுக்கு தொழில்

பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குள் பகுதி நேர வேலை வாய்ப்புகளை வழங்க பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. சுமார் 300 மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியரும் விசேட சத்திரசிகிச்சை நிபுணருமான டொக்டர் எம்.டி.லமாவங்ச தெரிவித்தார்.



1987 ஆண்டு உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 35 வது வருட நினைவேந்தல் நிகழ்வு இன்று அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்ற போது.. (**படங்கள் எஸ்.கார்த்திகேசு**)



## நாடு பொருளாதார நெருக்கடியில்

அவர்கள் மேற்கொண்டதாகவும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐ.தே.க கார்களைத் தாக்கியவர்களுக்கும் ஐ.தே.க உறுப்பினர்களைக் கொன்றவர்களுக்கும் கூட தற்போதைய ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த காலங்களில் அம்பாறை மக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் எனவும், அவர்கள் யாருடைய அடிமைகளோ அல்லது கைதிகளோ அல்லனர் என்றாலும், அன்று சிறந்து விளங்கிய நாட்டின் விவசாயிகள், மீனவர்கள்,கூலித்தொழிலாளிகள்,பெண்கள்தலைமைதாங்கும் குடும்பங்கள்,அங்கவீன குடும்பங்கள்,பாடசாலை சிறுவர்கள் என அனைவரும் இன்று உதவியற்ற நிலையில் உள்ளனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் திரிபோஷா கூட கொடுக்க முடியாத இந்த அரசாங்கம் இந்நாட்டின் பொருளாதாரத்தை அழித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதாகவில்லை எனவும், உர மானியம் கிடைப்பதில்லை எனவும், குழந்தைகளுக்கு பால் மா இல்லை என்றும், மண்ணெண்ணெய்யோ அல்லது பிற எரிபொருள்களோ இல்லாத நிலையில்,மொட்டு அரசாங்கம் தமக்கு நெருக்கமாக செயற்படும் பிரிவினர்களுக்கிடையே அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் பொருளாதாரத்தைக் கொன்று குவித்த ராஜபக்சர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்காவிட்டாலும் அவர்களுடன் நட்புறவு கொண்டாடும் பிரிவினர்களூடாக அமைச்சுப் பதவிகளை பெற்று ராஜபக்சர்கள் விரும்பியவாறு நாட்டை ஆட்சி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.10 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும் என நட்ட ஈடு வழங்கப்பட்டாலும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு கோடிக்கணக்கு எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஈஸ்டர் தாக்குதலில் எங்களுடைய சொந்த மக்களே கொல்லப்பட்டாலும் சுகபோகம் அனுபவிப்பது அமைச்சர்கள் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலவரங்களை உருவாக்க மக்கள் வீதியில் இறங்கவில்லை என்றும், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இதுவல்லவெனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், புதிய தேர்தல் மூலமே அந்த மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும்,அதற்காக அனைவரும் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை தேர்தல் தொகுதியின் பிரதான அலுவலக திறப்பு விழாவும் தேர்தல் தொகுதிக் கூட்டமும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று(15) நடைபெற்றது.

## இணையதளம் மூலம் விண்ணப்பிக்க முடியும்

திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்திற்குச் சென்று விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# திறன் வகுப்பறை திறந்து வைப்பு








மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை இன்று(15) திறந்து வைக்கப்பட்டது. சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு, ரத்தினம் பவுண்டேன் ஆகிய நிதியுதவியின் கீழ் குறித்த திறன் வகுப்பறைக்கான நவீன பலகை மற்றும் அதோடிணைந்த நவீன சாதனங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அதிபர் மூ.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தமையுடன், ஆரம்ப, இடைநிலைப்பிரிவு இரு வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தலும், இதனைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டமை எடுத்துக்காட்டத்தக்கது. குறித்த கற்பித்தலினை அதிதிகளும், பெற்றோர்களும் பார்வையிட்டிருந்தனர்.

# ஒரு இலட்சம் பனைமரங்களை வளர்க்கும் செயல் திட்டம் வாகரையில் ஆரம்பித்துவைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சமூக மட்ட பிரதேச மக்களின் முழுமையான பங்கேற்புடன் காட்டு யானைகளின் ஊடுருவலையும் மண்ணரிப்பையும் தடுக்க ஒரு இலட்சம் பனை மரங்களை வளர்க்கும் செயல் திட்டம் வாகரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்துள்ளார். நிலைபேறான சமூக அபிவிருத்திக்கு சூழலைப் பொருளாதார மூலதனமாக்குவோம் அதற்காக பாடுபடுவோம்" எனும் தொனிப் பொருளின் கீழ் பனை விதை நடுகை விசேட செயற்திட்ட வாரம் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பால்சேனை அம்மன் குளத்தை அண்டிய நிலப்பரப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திலீப்குமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிங்கம் மயூரன் மட்டக்களப்பு வாகரைப் பிரதேச செயலாளர் ஜி. அருணன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதாகரன் உள்ளிட்ட அதிகாரிகளும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன அலுவலர்களும் பிரதேச பொதுமக்களும் கலந்து கொண்டுள்ளனர். ஒரு இலட்சம் பனம் விதைகளை நடும் இந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொருளாதார வளர்ச்சி வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு ரூபாய்க்கு ஒரு பனம் விதை என்ற அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு நாட்டப்படுவதாக நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து முன்னெடுத்துள்ள இந்தத் திட்டத்தில் காட்டு யானைகளையும் மண்ணரிப்பையும் தடுக்கும் அரணாக ஒரு வார காலத்திற்குள் ஒரு இலட்சம் பனை விதைகள் நாட்டப்படவுள்ளன.

அத்துடன் பனை வளத்திலிருந்து அதி உச்ச பொருளாதார வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் வகையிலும் திட்டங்கள் அமுலாக்கப்படவுள்ளதாக சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மயூரன் தெரிவித்துள்ளார். "எங்களது செயற்பாடு எங்களது எதிர்காலம் – பெண்களையும் விவசாயிகளையும் வலுப்படுத்துவோம்." எனும் சமாந்தர செயல் திட்டத்தில் கிராமப்புற பெண்களின் சமூக மற்றும் பொருளாதார சக்தியை வலுப்படுத்துவதும் நோக்கமாக உள்ளது என்றும் மயூரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# தியாக தீபம் திலீபனின் 35வது நினைவு தின வாகன ஊர்வலம்





திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

தீயாக தீபம் திலீபனின் 35வது நினைவு தினத்தினை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் யாழ்பாணம் நல்லூர் ஆலயம் வரையான திலீபனின் திரு உருவப்படம் தாங்கிய வாகன ஊர்த்தி இன்று பொத்துவில் நகரில் இருந்து ஆரம்பமாகி இருந்தன. இவ் நினைவு தின வாகன ஊர்த்தியின் ஆரம்ப நிகழ்வானது பொத்துவில் நகரில் இன்று காலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு பொது மக்களால் மலர் தூவி திலீபனின் உருவப்படத்திற்கு தமது அஞ்சலியினை செலுத்தி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி பிரதான வீதி வழியாக திருக்கோவில் நகரினை வந்தடைந திருந்தன. இதன் போது திருக்கோவிலில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு பொது மக்கள் மலர் தூ வி தீபம் ஏற்றி அஞ்சிலிகள் செலுத்திப்பட்டு இருந்தன.

இதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தியாக தீபம் திலீபன் தொடர்பான நினைவுப் பேரூரை ஒன்றினை நிகழ்த்தி இருந்தார். இவ் நிகழ்வானது திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்று இருந்தன. தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன பேரணியானது இன்று பொத்துவில் நகரில் ஆரம்பமாகி இந்த பேரணியானது அம்பாரை மட்டக்களப்பு திருகோணமலை ஊடாக எதிர்வரும் 26ந் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தில் நிறைவு பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தியாக தீபம் திலீபனின் நினைவு வாகன ஊர்தி பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்ளான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செல்வராசா கஜேந்திரன் கட்சியின் மாவட்ட தேசிய அமைப்பாளர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு தமது அஞ்சலிகளை செலுத்தி இருந்தனர்.

# எழுச்சி மிகு" மாநகரம் திட்டத்தின் கீழ்

## பனிச்சையடி முதலாம் குறுக்கு வீதி அபிவிருத்தி



"எழுச்சி மிகு" மாநகரம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பணிச்சையடி முதலாம் குறுக்கு வீதியினை தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் இன்று (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாநகர சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் 02ம் வட்டார உறுப்பினர் செல்வி. தாயளகுமார் கௌரி அவர்களின் பாதீட்டு முன்மொழிவுக்கு அமைய 2 மில்லியன் ரூபா செலவில் குறித்த வீதியானது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. பல ஆண்டு காலமாக குன்றும் குழியுமாக கவனிப்பார் அற்று காணப்பட்ட இவ்வீதியானது சுமார் 220 மீற்றர் நீளத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையின் பதில் முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மாநகர சபையின் உறுப்பினர்களான செல்வி. தாயளகுமார் கௌரி, அந்தோணி கிருரஜன், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் டி.ஜே.கிறிஷ்டிராஜ் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

2018 ஆம் ஆண்டு மாநகர சபையினை தாம் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் பல்வேறு அபிவிருத்தி பணிகளை வெவ்வேறு திட்டங்களின் ஊடாக செயற்படுத்தி வருவதாகவும் அதன் தொடர்ச்சியாக மக்களின் வரிப்பணம் மக்களுக்கே சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் தற்போது மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது பதில் முதல்வர் க.சத்தியசீலன் கருத்து தெரிவித்தார்.

# மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் நடந்துகொண்டால் விளைவுகளுக்கு மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமே பொறுப்பாகும்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கையை எதிர்த்து அமைதியான முறையில் தொழிற்சங்க போராட்டம் நடைபெற்று வருகின்றது. இதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் நடந்துகொண்டால் ஏற்படும் விளைவுகளுக்கு மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமே பொறுப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை. வழமையான பணிகளுக்கு இடையூறு விளைவிக்கவில்லை. தொழிற்சாலைகளில் உற்பத்தி வழமையாக நடைபெறுகின்றது. பொதி செய்யும் வேலைகள் கூட தடுக்கப்படவில்லை. ஆனால் விற்பனைக்காக தேயிலை பொதிகளைக் கொண்டு செல்வதற்கு முன் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தொழிலாளர்கள் பிரச்சனையை தீர்த்து வைக்குமாறு கோருகிறோம். இது மிக மிக சாதாரண தொழிற்சங்க நடவடிக்கையாகும். இந்நிலையில் அப்புகஸ்தன்ன தோட்டத்தில் பொதி செய்யப்பட்ட தேயிலையை கொழும்புக்கு கொண்டு செல்ல தோட்ட நிர்வாகம் முற்பட்டிருக்கிறது. இது தோட்டத் தொழிலாளர்களை ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியது கம்னிகளின் கடமையாகும். தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 20 கிலோ தேயிலை கொழுந்து பறிக்குமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள். அதற்கு குறைவாக பறிக்கப்படும் கொழுந்து கிலோவிற்கு 50 ரூபா வீதம் கொடுக்கிறார்கள். தற்போது தேயிலை செடிகள் முறையாக பராமரிக்கப்படாத நிலையில் பெருந்தோட்ட நிறுவனம் எதிர்ப்பார்க்கும் தேயிலைக் கொழுந்தை பறிக்க முடியாது. தேயிலை செடிகளுக்கு உரமிடப்படுவதில்லை. முறையாக மருந்து



தெளிக்கப்படுவதில்லை. புற்கள் அகற்றப்படுவதில்லை. இதற்கிடையில் கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களே புற்களை அகற்றிக் கொண்டு கொழுந்தையும் பறிக்க வேண்டும் என்ற பணிப்புரை வழங்கப்படுகின்றது. இதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் புறக்கணித்து வருகின்றது. இந்நிலையில் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொள்வதை விட வேறு வழி இல்லை. மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் கடும்போக்கு அடக்குமுறைக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் அமைதியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போதைய நிலையை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். அதை விடுத்து தொழிலாளர்களை ஆத்திரமூட்டி அதன்மூலம் அமைதியற்ற நிலையை ஏற்படுத்த முற்பட்டால் அதற்கான முழு பொறுப்பையும் மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். தொழிலாளர்களின் பிரச்சினை தீர்க்கப்படும் வரை பொதி செய்யப்பட்ட தேயிலையை கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இறக்காமத்தில் கலாசார மத்திய நிலையம் திறந்துவைப்பு





**நூருல் /ஹுதா உமர்**

கலாசார அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இறக்காமம் கலாச்சார மத்திய நிலையத்தின் திறப்பு விழா இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ். எம். ரஷ்ஷான் தலைமையில் புதன்கிழமை விமர்சையாக திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்லஸ் கலந்து கொண்டதுடன் விஷேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜகதீசன், பிரதம கணக்காளர் ஏ.எல். ஆதம்பாவா, மாவட்ட பொறியியலாளர் எம்.ஐ. றாசிக் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். ஜமீல் காரியப்பர், முன்னாள் தவிசாளரும் பிரதேச சபை உறுப்பினர்களுமான ஜே.கே. றஹ்மான், எம்.ஐ. நைசர், உறுப்பினர் .எம். ஆசிக் முன்னாள் தவிசாளர் யூ.கே. ஜபீர் (மௌலவி) ஆகியோர் வருகைதந்தனர்.

இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கணக்காளர் றிம்ஷியா அர்சாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜமீல், தலைமைப்பிட்ட சமுர்த்தி முகாமையாளர் எம்.சி. தஸ்லீம் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் (மத்திய அமைச்சு) டீ.எம். றிம்ஷான், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் (மாகாண அமைச்சு) ஏ.எல். தௌபீக், பிரதேச கலாச்சார அதிகார சபையின் உப தலைவர் எஸ்.எல். நிசார், பொருளாளர் யூ.எல். ஜிப்ரி, கோட்டக் கல்வி அதிகாரி யூ.எல். மஹ்மூட் லெப்பை, வரிப்பத்தான்சேனை ஜ/ம்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.எல். ஹாமிது லெப்பை (மதனி), அஷ்ரப் தேசிய பாடசாலை பிரதி அதிபர் ஏ.எம். இர்பானா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கலாசார மத்திய நிலைய திறப்பு விழா நிகழ்வில், பிரதேச செயலாளரினால் அரசாங்க அதிபர் கௌரவிக்கப்பட்டதுடன் கலாச்சார அதிகார சபையினால் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். சர்வ மத பிரார்த்தனைகள், பிரதேச கலை கலாச்சார பாரம்பரியத்தை எடுத்தியம்பும் கலாச்சார நிகழ்வுகள், மேலும் மூத்த கலைஞர்களின் பாடல்கள், ஓரங்க நாடகம் என்பன இடம்பெற்றதுடன் இஸ்லாமிய கலாச்சார மரபுரிமை அமைப்பின் சீனடி, வாள் வீச்சு, சிலம்பாட்டம், தற்காப்பு நிகழ்ச்சிகள், அல் ஹிலால் அஹதியா பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய கலை நிகழ்ச்சிகள், அஷ்ரப் தேசிய பாடசாலை மாணர்களின் கலைப் படைப்புக்கள், அமீரலிபுரம் வித்தியாலய மாணவர்களின் முஸ்லிம் பாரம்பரிய பொல்லடி கோலாட்டம், ரித்ம நடனக் குழுவின் நடன நிகழ்ச்சிகள், அஸ்–ஸபா வித்தியாலய மாணவர்களின் பேண்ட் வாத்திய குழுவின் இசை என பல்வேறு கலை நிகச்சிகள் இடம்பெற்றன.

# திருகோணமலை நகரை தூய்மையாக பேணுவது தொடர்பான கலந்துரையாடல்



திருகோணமலை பொது வைத்தியசாலை மற்றும் நகர்புறத்தை அண்டிய கரையோரப் பிரதேசங்களைத் தூய்மையாக பேணுவது தொடர்பான கலந்துரையாடல் இன்று(14) மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் பி. எச்.என். ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை பொது வைத்தியசாலை அமையப் பெற்றிருக்கும் கரையோரப் பிரதேசத்தில் வைத்தியசாலைக் கழிவுகள் உட்பட கழிவுநீர் வெளியேற்றப்படுவதால் அப்பிரதேசத்திற்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகள் பாதிப்புகளுக்கு முகங்கொடுப்பதாக அரசாங்க அதிபருக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டதையடுத்து சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சபையின் ஒழுங்கமைப்பின் கீழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் இவ்விஷேட கூட்டம் கூட்டப்பட்டது.

திருகோணமலை நகரம் சுற்றுலா நகரமாகக் காணப்படுகின்றது. கரையோரம் சார் பகுதிகளில் கழிவுகளை அப்புறப்படுத்தி துர்நாற்றம் ஏற்படக்கூடிய பிரதேசங்களாக மாற்றியமைப்பதனை விடுத்து தூ ய்மையானதும் ரம்மியமானதுமான பிரதேசமாக கடற்கரையோரங்களை பேண ஒவ்வொரு பிரஜையும் தமது பங்களிப்பை நல்க வேண்டும். பொது வைத்தியசாலை அமையப் பெற்றுள்ள கரையோரம்சார் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் நீராட வருகின்றனர். அப்பிரதேசத்தில் கழிவுகள் வெளியேற்றப்படும்போது சுற்றுலாப் பயணிகளுடைய வருகைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தும். அப்பிரதேசத்தில் பவளப் பாறைகள் காணப்படுவதாகவும் கழிவகற்றல் செயற்பாடு மூலம் பவளப்பாறை பாதிப்பிற்குட்படும். எனவே இது தொடர்பில் நீண்ட கால, நடுத்தர கால, குறுங்கால செயற்றிட்டங்களை வடிவமைத்து உரிய நிறுவனங்கள் செயற்படுமாறு அரசாங்க அதிபர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை 11 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. பொது வைத்தியசாலை மூலம் வெளியேற்றப்படும் இரசாயனக்கழிவுகள் உரிய நியமங்களைப் பின்பற்றி அழிக்கப்படுகின்றன. இரசாயனக்கழிவுகள் தன்னுடைய பதவிகாலத்தில் கரையோரத்துக்கு விடுவிக்கப்படவில்லை. அவ்வாறான சம்பவங்கள் பதிவாகினால் அது தொடர்பாக தன்னை அறிவுறுத்துமாறும் கரையோர சுற்றாடலைப் பேணிப் பாதுகாக்க வைத்தியசாலை அபிவிருத்தி சமூகத்தை இணைத்து செயற்படவிருப்பதாகவும் திருகோணமலை பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வைத்தியசாலையில் வெளியேற்றப்படும் கழிவுநீரைக் கடலுடன் கலக்கவிடாமல் அவற்றை பவுசர் மூலம் சேகரித்து கன்னியா கழிவகற்றல் பிரதேசத்தில் உரிய முறைப்படி விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டது. திருகோணமலை நகரசபை இச்செயற்பாட்டை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 23ம் திகதி காலை 7:30 மணியளவில் திருகோணமலை பொது வைத்தியசாலை சார்ந்த கரையோரப் பிரதேசத்தில் தூய்மைப்படுத்தல் சிரமதானம் மேற்கொள்வதாகவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், சமுத்திரச் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினுடைய வடகிழக்கு உதவி முகாமையாளர் டி. ஸ்ரீபதி, திருகோணமலை நகர சபை செயலாளர், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# 110 லீற்றர் டீசல் எங்கே? சபையில் கேள்வி எழுப்பிய உறுப்பினர்கள்



**(ரக்ஸனா)**

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 55 வது அமர்வது சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் வியாழக்கிழமை(15) நடைபெற்றது. இதன்போது சபையில் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரின் இடமாற்றுவது தொடர்பில் கடந்த மாத அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானம், சபையின் உப தவிசாளர் தனிப்பட்ட விடையம் காரணமாக வெளிநாடு சென்றதன் காரணமாக தற்காலிகாலிக உபதவிசாளரைத் தெரிவு செய்தமை, சபைக்குச் சொந்தமான எரிபொருள் காணாமல் போயுள்ளவிடையம் உள்ளிட்ட பல விடைங்கள் தொடர்பில் பல வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இந்நிலையில் தனது சொந்த விடையம் காரணமாக சபையின் தவிசாளருக்கு அறிவித்துவிட்டு வெளிநாடு சென்றதாகவும், அதற்கு இடையில் தற்காலிக உபதவிசாளர் ஒருவரை சபை உறுப்பினர்கள் தெரிவு செய்துள்ளதாகவும், இது சட்டத்திற்கு முரணாணது, இதனை தான் வன்மையாக கண்டிப்பதாக உபதவிசாளர் திருமதி.க.ரஞ்சினி தெரிவித்தார். இதனிடையே மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரை இடமாற்றுவதற்கு ஆர்பாட்டம் மேற்கொள்ள வேண்டும் என மே.வினோராஜ் கருத்தை முன்வைத்தார் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தாம் தயார் இல்லை அதற்கு ஆதரவு வழங்க முன் வரமாட்டோம் என உபதவிசாளர் திருமதி.க.ரஞ்சினி, மற்றும் உறுப்பினர்களான காண்டீபன், இரவீந்திரன் ஆகியோர் தெரிவித்தனர். சில உறுப்பினர்கள் கருத்துக்கள் எதுவும் தெரிவிக்காமல் மௌனம் காத்தார்கள். மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரை இடம்மாற்றுவது தொடர்பில் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்குப் பதில் கிடைத்ததும் மேற்கொண்டு அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இச்சபை அமர்வின்போது பிரதேசத்திற்குட்பட்ட வடிகான்களைத் துப்பரவு செய்தல், நூலகங்களுக்கு வாசகர் வட்டங்களை இஸ்தாபித்தல், சுகாதார வேலைகளைத் துரிதப்படுத்தல், நூலகங்களிலிருந்து வெளியில் இரவல் வழங்கி இதுவரையில் மீளப்பெறாத புத்தகங்களுக்குப் பதிலாக உரிய நூலகரிகளிடமிருந்து அதற்குரிய புதிய நூல்களைக் கொள்வனவு செய்தல், 1985 ஆம் ஆண்டிலிருந்து சபைக்குச் சொந்தமான கட்டடங்களின் வாடகைப் பணம் நிலுவையாக அறவிடமுடியாமல் உள்ளதனால் அதனை அறவிடமுடியாத கடன்களாகக் கழித்தல், வைப்பு பணத்திலுள்ள காசை வருமானத்திற்கு மாற்றுதல், பிரதேசத்தின் குருக்கள்மடம் எல்லையைத் தீர்மானித்துத் தருமாறு உரிய திணைக்களத்திற்கு கடித்தம் அனுப்புதல், வாழ்வாதார செயற்பாடுகளை துரித்தப்படுத்துதல், சபைக்குச் சொந்தமான களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் அமைந்துள்ள கடை ஒன்றில் அண்மையில் மின்னொழுக்கக் காரணமாக எரிந்துதுள்ளது அக்கடை உரிமையாளருக்கு இழப்பீடு வழங்குதல், சபைக்குச் சொந்தமான 110 லீற்றர் டீசல் காணாமல் போயுள்ளது அதுதொடர்பில் விசாரணைகளை முன்நெடுத்தல் உள்ளிட்ட பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.



திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2023 ம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பாக பொதுமக்களுடனான கலந்துரையாடல் திருகோணமலை பொது நூலக கேட்போர்கூடத்தில் நகரசபையின் தலைவர் நா. இராசநாயகம் தலைமையில் நேற்று (14) நடைபெற்றது. (**படம்- அ . அச்சுதன்)**

# மன்னார் பஸ்சில் போதை பொருள்



**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் கொழும்பு சேவையில் ஈடுபட்ட இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதை பொருள் இராணுவத்தினால் கண்டு பிடிக்கப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை. புதன்கிழமை (14.09.2022) இரவு 8 மணிக்கு மன்னாரிலிருந்து கொழும்புக்கு பயணிகளுடன் சென்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டியை மன்னார் பாலத்தடியில் வைத்து ராணுவத்தினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது பஸ் வண்டியில் பின் ஆசனத்தில் 150 கிராம் ஐஸ் போதை பொருள் மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது

இதைத் தொடர்ந்து அதில் பயணித்திருந்த பிரயாணிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை இருந்த போதும் இவ் பஸ் வண்டியின் சாரதியும் காப்பாளரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் இவ் போக்குவரத்து சேவையை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு





**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பகுதிக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் மற்றும் கையடக்கத் தொலைபேசி பாவனை தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இன்று (15) இடம் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. முஸ்லிம் எயிட் அமைப்பினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் வாழும் 100 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன. இதில் தம்பலகாமம் பொலிஸ் நிலைய மகளிர் பிரிவு அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்னை செய்கையை ஊக்குவிக்கும் செயலமர்வு



**(அ . அச்சுதன் )**

சம்பூர், கடற்கரைச் சேனை பகுதிகளில் தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் தென்னை பயிர்ச் செய்கையாளர்களுக்கான செயன்முறை பயிற்சி விளக்கச் செயலமர்வு சம்பூர் – கடற்கரைச்சேனையில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்றது. உள்ளூர் தென்னை செய்கையை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் பயிற்சியின்போது தென்னை பயிரிடும் முறை, பசளை இடும் வழிமுறை, தென்னையை பராமரிக்கும் முறை, தென்னையை நோய் தாக்காதிருக்க என்ன செய்ய வேண்டும் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக செயன்முறையின் மூலம் செய்து காட்டப்பட்டு தென்னை செய்கையாளர்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன. இவ் செயன்முறை பயிற்சியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட தென்னை செய்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இச்செயலமர்வில் திருகோணமலை தென்னை பயிர்ச்செய்கை சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் சுமீத் பண்டார, மூதூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.சிபான் , கிராம உத்தியோத்தர் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச போட்டியில் காத்தான்குடி முனீர் பதக்கம் பெற்று சாதனை

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**



புத்தாக்கம் கண்டு பிடிப்பாளர்களுக்கான சர்வதேச போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியைச் சேர்ந்த காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த பாறூக் முஹம்மத் முனீர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பங்குபற்றி சர்வதேசரீதியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தரவு தொழில்நுட்பம் மற்றும் பயன்பாட்டு அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற பிரிவுகளில் தங்கம் மற்றும் வெள்ளி என பாதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார். கனடாவின் டொரொண்டோவில் நடைபெற்ற (ஐ கேன்) என்னால் முடியும் என்ற இந்த சர்வதேச கண்டு பிடிப்பாளர் புத்தாக்க போட்டியில் இம்முறை 81 நாடுகளில் இருந்து 700 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டதின் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த பாறூக் முஹம்மத் முனீர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பங்குபற்றி சர்வதேசரீதியில் தகவல் தொழில்நுட்பம் தரவு தொழில்நுட்பம் மற்றும் பயன்பாட்டு அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற பிரிவுகளில் முறையே தங்கம் மற்றும் வெள்ளி என இரட்டைப் பதக்கங்களுடன், சர்வதேச சிறப்பு விருது, கனடிய சிறப்பு விருது, முதல் 20 சிறந்த கண்டுபிடிப்பு விருது மற்றும் விசேட ஐரோப்பிய டிப்ளமோ போன்ற விருதுகளை ஒரே தடவையில் வெற்றி பெற்றுள்ளார்.' இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வருடாந்தம் தேசிய ரீதியில் நடாத்தும் புத்தாக்க க்டு பிடிப்பாளர் போட்டியில் 2020ல் போட்டியில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றி தேசியரீதியில் தங்கம் மற்றும் வெள்ளி என இரட்டைப் பதக்கங்களைப் வெற்றி பெற்றதன் பயனாக இவருக்கு சர்வதேச போட்டியில் பங்கு சந்தர்ப்பம் கிழைடத்தது.காத்தான்குடி மத்திய கல்லூரி, காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயம் மற்றும் சாவியா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் மென்பொருள் திட்டமிடுதலில் கைதேர்ந்தவராகவும் நவீன இலத்திரனியல் துறையில் ஈடுபாடு கொண்டவராகவும் காணப்படுகின்றார். இவர் பல துறைகளுக்கு மென்பொருளினூடாக பெரும்பாலான தீர்வுகளை வழங்கிவருகின்றார். அதேநேரம் இவர் புதிய தொழில்நுட்பங்களை ஆய்வு செய்வதிலும் நவீன யுகத்துக்கு பொருத்தமாக கண்டு பிடிப்புகளை பொதுப்பயன்பாட்டுக்காக தயாரிக்கும் பணியிலும் தன்னுடைய நேரத்தை செலவிட்டு வருகின்றார்.



# இன்றுவரை நான்தான் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் உபதவிசாளர் - றஞ்சினி




(வ.சக்திவேல்)

கடந்த 2018.02.10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு வட்டாரத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிட்டு, வெற்றிபெற்றேன். இந்நிலையில் எமது பிரதேச சபையின் உப தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டேன். 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் நான்தான் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் உப தவிசாளராக இருந்து செயற்பட்டு வருகின்றேன். என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி.றஞ்ஜினி கனகராசா தெரிவித்துள்ளார். களுதாவளையில் அமைந்துள்ள பிரதேச சபையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் வியாழக்கிழமை(15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் நான் எனது சொந்த விடையம் காரணமாக திடீரென கடந்த 2022.07.05 அன்று தவிசாளருக்கு அறிவித்து விட்டு வெளிநாடு சென்றிருந்தேன். 1987 ஆம் ஆண்டு 15 இலக் பிரதேச சபைச் சட்டத்தின்படி கடமையிலிருக்கின்ற உப தவிசாளர் அல்லது தவிசாளர் யாராயினும் அவர்கள் பதவியை நேரடியாக தேர்தல் ஆணையாளரிம் சென்று இராஜினாமா செய்திருக்க வேண்டும், அல்லது உரிய நபர் மரணித்திரக்க வேண்டும், அல்லது அவர் தொடற்சியாக அறவித்தலின்றி மூன்று சபை அமர்வுகளுக்கு கலந்து கொள்ளாதிருந்திருக்க வேண்டும். இவ்வாறு எதுவும் நடைபெறாமலுள்ள இந்நிலையில் உப தவிசாளரான நான் இருக்கும் இத்தருணத்தில் எமது சபையில் உள்ள பிறிதொரு உறுப்பினரை ஏனைய உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தற்காலிக உப தவிசாளராக நியமித்திருந்தார்கள். இது அவர்களின் அறியாமையாகும்.

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க உள்ளூராட்சி சட்டத்தின்படி உரிய பதவி வகிக்கும் உறுப்பினர் இராஜினாமா செய்யுமிடத்து, தேர்தல் ஆணையாளர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்ததன் பின்னர் உள்ளூராட்சி ஆணையாளர் பிரதேச சபைக்கு வந்து அவர் முன்னிலையில் தெரிவு இடம்பெறல் வேண்டும். அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சபைக்கு வந்து அவர் முன்னிலையில்தான் உரிய வெற்றிடமான பதவிக்கு உறுப்பினர்களிடமிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பதுதான் சட்டமாகும். இது எதுவும் நடைபெறாமல் எமது சபைக்கு உப தவிசாளராக நான் உத்தியோகபூர்வமாக இருக்கையில் தற்காலிகமாகவேனும் அவ்வாறு ஒரு தெரிவை சட்டத்தின்படி மேற்கொள்ள முடியாது. இதனை நினைத்து வெட்கப்படுகின்றேன்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பல அமைப்புக்கள் உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பல கருத்தரங்குகளை வைத்து அது தொடர்பாக சட்டப் புத்தகங்களையும் வழங்கியுள்ளார்கள். இவ்வாறு இருந்தும் எமது சபையில் தற்காலிக உபதவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்து அவமானப்படுத்தியதாகத்தான் நான் கருதுகின்றேன். எனவே அன்றிலிருந்து இன்றுவரை நான்தான் இந்த பிரதேச சபையில் உபதவிசாளராக இருந்து செயற்பட்டு வருகின்றேன். சட்டத்தின்படி எனக்கு வழங்கப்பட்ட பதவியை வேறு எவரும் கைப்பற்ற முடியாது. தற்காலிகமாக உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதாக கருதப்படும் உறுப்பினர் நான் இல்லாத காலத்தில் உபதவிசாளர் என்ற பதவியை வைத்து எந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டாரோ அதனை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் வியாழக்கிழமை(15) நடைபெற்ற சபை அமர்வின்போதும் முன்வைத்துள்ளதோடு, இனிமேலும் அவர் தொடர்ந்து தற்காலிக உபதவிசாரளாக இயங்கமாட்டார் என நினைக்கின்றேன். அவ்வாறு அவர் இயங்கினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நான் தயாராக இருக்கின்றேன். எனவே மக்கள் அரசியலில் கௌரவம் என்ற சொல்லுக்கு மதிப்பளிக்கக்கூடி தகுதியானவர்களை மக்கள் தெரிவு செய்யவேண்டும். அவ்வாறானவர்களை மக்கள் தெரிவு செய்தால் இவ்வாறான பிழைகள் இடம்பெறாது. மக்கள் இனிவரும் தேர்தல்களில் மக்களோடு மக்களாக இருந்த சேவை செய்யக்கூடியவர்களைத் தேர்வு செய்யவேண்டும். என அவர் இன்போது மேலும் தெரிவித்தார்.

# துண்டு பிரசுரங்கள் விநியோகம்

தலவாக்கலை பி.கேதீஸ்

ஒன்றிணைந்த தொழிற்சங்க மையம் மற்றும் ஐக்கிய மக்கள் இயக்கம் இணைந்து நுவரெலியாவில் அரச மற்றும் தனியார் ஊழியர்களைக் தெளிவுப் படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர். அதன் அமைப்பாளர் பாஸ்கர் தலைமையில் நுவரெலியா நகரில் இத்துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த துண்டு பிரசுரம் நுவரெலியா பிரதான தாபாலக ஊழியர்களுக்கும் நுவரெலியா மாவட்ட செயலகம் ,நுவரெலியா பிரதேச செயலகம் உட்பட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.இதில் 2022 ம் ஆண்டு ஜனாதிபதியால் சமர்பிக்க பட்ட வரவு செலவு திட்டத்தில் அரச,தனியார் ஊழியர்களின் சம்பள உயர்வோ, வேறு எந்த கொடுப்பனவே வழங்க முன் மொழிய வில்லை. மாறாக அரச ஊழியர்களின் சேவை காலம் மட்டுப்படுத்தப்படுத்தும் திட்டமும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைக் தனியார் மய படுத்தவும் முன்மொழிய பட்டுள்ளது.கடந்த ஆண்டு ஜ/லை மாதம் முதல் இந்த வருடம் ஜ/லை வரையிலான வாழ்க்கைச் செலவுகள்146.5 முதல் 244.4 வரை உயர்ந்துள்ளது.



நாளாந்தம் உணவு பொருட்களின் விலைகள் உயர்துள்ளன. ஆனால் அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு அண்மையில் சமர்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் அதிகரிக்கப்படவில்லை. எனவே அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். விசேட கொடுப்பனவுகளும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.அத்தோடு அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளன, நாட்டு மக்கள் பட்டினியில் வாழ்கின்ற போது அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்க படுகின்றனர்.இவர்களின் நாளாந்த செலவீனம் கோடி ரூபாவாகும் ஆகவே நாட்டு மக்களின் பிரச்சனைக்கு அரசு உடன் தீர்வை காணாவிட்டால் இந்த அரசாங்கமும் வீடு செல்ல வேண்டும் எனவும் துண்டு பிரசுரத்தின் மூலம் மக்களை தெளிவுப்படுத்தினர்.

# ஓமான் நாட்டிற்கு புதிய தூதுவராக நியமிக்கப்பட்டவருக்கு கௌரவிப்பு



(அஷ்ரப் ஏ சமத், சில்மியாயூசுப்)

இலங்கை அரசாங்கத்தினால் ஓமான் நாட்டிற்கு புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட ஏ.பசருல்லாக்காண் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (14) கொழும்பு 03ல் உள்ள மந்தரினா ஹோட்டலில் நடைபெற்றது. இந் நிகழ்வினை லேக் ஹவுஸ் டெயிலி நியுஸ் பத்திரிகையின் சிரேஸ்ட ஊடகவியலாளரும், கொழும்பு டைம்ஸ் ஸ்தாபகர், அரப் நியுஸ் இலங்கை ஊடகவியலாளருமான மொஹமட் ரசூல்டீன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.

இந் நிகழ்வுக்கு அதிதிகளாக வெளிநாட்டுத்தூதுவர்கள் கலந்து கொண்டனர். கொரியா நாட்டுக்கான தூதுவர் வுன்ஜிங் ஜோன்ங், பங்களதேஸ் நாட்டுக்கான தூதுவர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம், துருக்கி நாட்டின் தூதுவர் டைமத், சேகர் சைகுலு, பலஸ்தீன் நாட்டுக்கான தூதுவர் கலாநிதி சுகைர் ஹம்துல்லா செய்யத், மற்றும் தூதுவர் ஆலயத்தின் கவுன்சிலர்களான – அமேரிக்க துாதுவரலயத்தின் பிரதி பிரதம மிசன் – டக்லஸ் சோனேக், இந்திய துாதுவர் ஆலயத்தின் கௌவுன்சிலர் பானு பிரஹாஸ், பாக்கிஸ்தான் துாதுவராலய ஆலயத்தின் முதல் செயலாளர் ரவுப் றிஸ்வான், பாக்கிஸ்தான் துாதுவலயத்தின் அதிகாரி ராசாக் கான், வெளிநாட்டு அமைச்சின் பணிப்பாளர் சித்தாரக் கான், துருக்கி நாட்டுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கைத் துாதுவர் றஸ்வி மசான், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹீம் அண்சார், டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பிணர் ஹாசீம் உமர், ஜே.ஜே. பௌன்டேசன் தலைவர் கலாநிதி ஜ.வை..எம் ஹனீப் மற்றும் றிஸ்மி றியால், ஓமான் நாட்டில் துாதுவராக கடமையாற்றி நாடு திரும்பியுள்ள அமீர் அஜ்வாத் ஆகியோறும் கலந்து சிறப்பித்தனர். ஏ. சபருல்லாக் கான் ஏற்கனவே வெளிநாட்டு அமைச்சில் மேலதிகச் செயலளர், சாக் நாடுகள், ஜக்கிய நாடுகள் அமையம் நியோக் , புதுல்லி, றியாத்,, நைஜீரியா, கொங்கோங் போன்ற பல்வேறு நாடுகளின் துாதுவர், கவுன்சிலர், போன்ற பல்வேறு துறைகளில் வெளிநாட்டு துறையில் கடமையாற்றியவர். அவர் கல்முனை சாஹிராக் கல்லுாரியின் பழைய மாணவர், கிழக்கு பல்கலைகக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரி, முதுமானி, வெளிநாட்டுத்துறை சம்பந்தமான பட்டங்களையும் பெற்றுள்ளர். ஆரம்பித்தில் அவர் ஆசிரியராகப் பணியாற்றி அதன் பின்னர் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் இணைந்து கடந்த 29 வருடங்கள் பல்வேறு வெளிநாட்டுத்துறைகளில் பணியாற்றி வருகின்றார். அவர் அங்கு உரையாற்றுகையில், ஓமான் நாட்டில் 35 ஆயிரம் இலங்கையர்கள் அங்கு பணியாற்றுகின்றார்கள் இலங்கை –ஓமான் நாடுகளுக்கிடையில கடந்த 40 வருட கால உறவுகளை நாம் கொண்டாடினோம். எனவும் அங்கு குறிபபிட்டு இவ் நிகழ்வினை ஏற்பாடு செய்த மொஹமட் ரசுல்டீன் றியாத் நாகரில் கவுன்சிலர் இருக்கும் போது அவர் அஙகு கடமையாற்றினார். அதில் இருந்து எங்களது உறவு இருந்து வருகின்றதாகவும் இப் ஏற்பாட்டினை ஒழுங்கு செய்தமைக்கு ரசூல்டீனுககு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

# வலயத்தின் முதலாவது சித்திர அறை திறந்து வைப்பு



(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை வலயத்தின் பாடசாலை மட்ட முதலாவது சித்திர அறை நேற்று(15) வியாழக்கிழமை சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்விப்பணிமனையின் பிரதிக்கல்வி பணிப்பாளர் யசிர் அரபாத், உதவி கல்விப் பணிப்பாளர்களான நசீர் , றியால் ,நைரூஸ் கான் , சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்கள். சித்திர பாடத்திற்கான வலய இணைப்பாளர் முனாப் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள். பாடசாலையின் சித்திர ஆசிரியர் ரி. வாமதேவனின் ஏற்பாட்டில் இந்த முதலாவது சித்திர அறை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# முன்பள்ளி பாடசாலையின் சிறுவர் சந்தையும் கண்காட்சியும்



(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெள்ளைமணல் நீரோட்டு முனை சுவீட் கிட்ஸ் பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை மற்றும் கைப்பணி கண்காட்சியும் இன்று (15) இடம் பெற்றது. குறித்த சந்தை நிகழ்வானது பாலர் பாடசாலையின் ஆசிரியை எம்.ஐ.இப்திகா பேகம் தலைமையில் இடம் பெற்றது. இதில் சிறுவர்களின் மூலமாக சிறிய வகை பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் என பல உற்பத்திகளை கொண்டதுமான பொருட்களை காட்சிப்படுத்தினர். இதில் பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம். நௌபர், தனியார் நிறுவன தேசிய பணிப்பாளர் ஏ.ஹிதாயத்துள்ளா ,சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் கே.அமுதியா உட்பட பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய தீமிதிப்பு

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் 17 ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது. தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைகிறது. தினமும் பகல் 12 மணிக்கு மதிய பூஜையும் மாலை 6 மணிக்கு இரவு பூஜை யும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம்பெறும். 19ஆம் தேதி திங்கட்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெறும் . 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை வீரகம்பம் வெட்டல் அதனை தொடர்ந்து 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நோன்புக் கட்டல் சடங்கு இடம் பெறும். 26 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆராதனையும் தீமிதிப்பு வைபவமும் இடம்பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார். வழமை போல அக்டோபர் 05 ஆம் தேதி கௌரி விரதம் இடம்பெறும்.

# மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபருக்கு பிரியாவிடை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.சி. ஜ/னைட் அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்வதனை முன்னிட்டு அவருக்கு கலாசாலையில் பிரியாவிடை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் உப அதிபர் கலாநிதி எம்.பி. ரவிச்சந்திரா பிரதி அதிபர் செல்வி சி.மொறின் உட்பட விரிவுரையாளர்கள், நிருவாக அதிகாரிகள், ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வித்துறை, சமூக விஞ்ஞானத்துறை, முதல்மொழி, ஆங்கிலத்துறை, விஞ்ஞானத்துறை உள்ளிட்ட அனைத்து ஆசிரிய மாணவர்களும் கலந்து கொண்டு மாற்றலாகிச் செல்லும் அதிபர் ஜ/னைட்டை வாழ்த்தி பாராட்டு தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வில் இடமாற்றலாகிச் செல்லும்கலாசாலை அதிபருக்கு பொன்னாடை போர்த்தி, பூ மாலைகள் அணிவித்து, நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இறுதி அஞ்சிலி செலுத்தினார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணத்திற்கு இரங்கல் தெரிவிக்க வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் காரியாலயத்திற்கு நேற்றுமுந்தினம் தினம் (13) திகதி விஜயம் மேற்கொண்டுள்ளார். இதன்போது இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவிற்கு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இரங்கல் தெரிவித்துள்ளார். அத்தோடு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்து உரையாடியதுடன், இரண்டாம் எலிசபெத் மகாராணி அவர்களின் இறப்பை முன்னிட்டு முற்போக்குத் தமிழ் உறவுகள் சார்பாகவும், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார். பின்னர் சிறப்பு நினைவுப் புத்தகத்தில் தனது இரங்கல் செய்தியை இராஜாங்க அமைச்சர் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்துமாறு முன் வைத்த திட்டம் வரவேற்கத்தக்கது

இந்திய மத்தியஅரசால் ஜெனிவா கூட்டத்தொடரில் முன் வைத்த 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்துமாறு முன் வைத்த திட்டம் வரவேற்கத்தக்க ஒரு செயற்பாடாகும். இது சிறுபான்மை மக்களின் அதிகாரப் பங்கீடு தொடர்பான அடிப்படை பிரச்சினையை தீர்பத்தற்கான ஒரு களமாகும். இலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்தால் தமிழ் மக்களுக்கென முன் வைத்த திட்டமாகும். இத்திட்டத்தை இன்னும் இலங்கை அரசு முழுமையாக அமுல்படுத்த வில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற இலங்கை அரசு இத்திட்டத்தை அமுல்படுத்துவதில் கட்சிகளுக்குள் முரண்பாடுகளை காரணம் காட்டி முப்பது வருடங்களுக்கு மேலாக இதை அமுல்படுத்தாமல் இழுத்தடித்து வருகின்றது. 13ஆவது திருத்தச்சட்டம் என்பது இலங்கையில் பாராளுமன்றத்தில் முடிவெடுத்து அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட ஒரு சட்டமாகும். இதை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தையும், மாகாண சபையையும் ஆட்சி புரிகின்ற கட்சிகளைப் பொறுத்தவையாகும். வருகின்ற எதிர் கட்சிகளும் பரிபூரண ஆதரவுகளை வழங்கும் பட்சத்தில் முழுமையாக அமுல்படுத்த முடியும். கடந்த காலங்களில் எந்தளவிற்கு இதை அமுல்படுத்துவதற்கு வடக்கிலுள்ள கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கி இருந்தன என்னும் கேள்வி தமிழ் மக்களுக்கு மத்தியில் தொக்கி நிற்கின்றன. எனவே வடக்கு கிழக்கிலுள்ள கட்சிகள் வடக்கு மாகாணசபை, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்தி 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபையினுடைய பங்குகளை



அமுல்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் பல அமைப்புக்கள் வாயிலாக பல்வேறு கொள்கைகள் இனப்பிரச்சினை தொடர்பாக முன் வைக்கப்பட்டது. ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்களும், சில அமைப்புக்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இலங்கையிலுள்ள ஒரு சில அரசியற் கட்சிகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தை வேண்டா விருந்தாளிகளாகவே உற்று நோக்கி வந்தனர். இன்றுள்ள சூழ்நிலையில் ஜெனிவாவில் தமிழர்களுக்கு சாதகமாக சில விடயங்கள் சில கருத்துக்கள் முன் வைக்கப்பட்டாலும் 13ஆவது திருத்தம் தொடர்பாக ஒரு நாடு பலமாக முன் வைத்துள்ள விடயத்தை நாம் ஏற்றுக் கொண்டு அமுல்படுத்த கூறியிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். என ஏன முகிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈபிஆர்.எல்.எப்–ப.ம.இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

## மட்டு மேற்கு மாணவர்கள், வீட்டில் கற்க ஒதுக்கும் நேரம் மிகக்குறைவு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள மாணவர்கள் வீட்டில் சுயமாக கற்பதற்கு ஒதுக்கும் மணித்தியாலங்கள் மிகக்குறைவே. இதனால் ஏனைய வலயங்களைவிட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆமைவேகத்தில் உயர்ந்து செல்கின்றது என மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவித்தார்.தரம் 11 மாணவர்களின் பெறுபேற்று பகுப்பாய்வு தொடர்பில் கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் கலந்துரையாடலிலே இதனைக்குறிப்பிட்டார். பல்வேறு அசாதாரண சூழ்நிலைகளால் கல்வியை இழந்திருக்கின்றோம். இழந்த கல்வியை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள் உதவியின்றியே மாணவர்களால் சுயமாக கற்க வேண்டும். ஆனால் மாணவர்கள் வீடுகளில் கற்பதில்லை. பாடசாலையில் கற்பிப்பதனை மாத்திரம் கேட்டிருந்துவிட்டு செல்கின்றனர். இச்சூழல் மாற்றமடைய வேண்டும் இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பும், ஊக்கப்படுத்தலும் அவசியமானது. தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுக்கலாம். ஆனால் அவற்றை உள்ளெடுத்துக் கொள்வது மாணவர்களிலேயே தங்கியுள்ளது என்றார்.






# குரங்குகளின் தொல்லைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை



பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லை காரணமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் பலவிதமான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக இம்மாவட்டத்தின் நாவிதன்வெளி , சம்மாந்துறை ,நிந்தவூர் ,சாய்ந்தமருது, கல்முனை, பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு காடுகளில் இருந்து கூட்டம் கூட்டமாக குரங்குகள் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் பழமரங்களுக்கு பலத்த சேதத்தை விளைவிப்பதுடன் இ வீடுகளுக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகளும் உடைந்து சேதத்திற்குள்ளாகின்றன. மேலும் இவ்வாறு குடியிருப்புகளுக்குள் கூட்டமாக வரும் குரங்குகள் வீடுகளுக்குள் நுழைந்து சமயலறையிலுள்ள உணவுப் பொருட்களை உண்டு நாசப்படுத்துகின்றன.

மேற்குறித்த பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் பயிர்செய்யப்பட்டுள்ள கொய்யா இ வாழை இ மா போன்ற பழ மரங்களின் பிஞ்சுகளை கடித்து சேதப்படுத்துவதால் விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளை தொடர முடியாதுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு அணில்களையும் இ குரங்குகளையும் அருகிலுள்ள காட்டுப்பகுதியிலிருந்து சனநடமாட்டம் இல்லாத வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

## சட்டபூர்வமற்ற முறையில் கொண்டு செல்லப்பட்ட ஆடுகள் மீட்பு

(வாஸ் கூஞ்ஞ)

சட்டத்திட்டங்களுக்கு மாறாக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டபோது பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட ஆடுகள் பொலிசாரல் கைப்பற்றப்பட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். மஸ்கெலியா பகுதியில் இருந்து கரவனெல்ல பகுதிக்கு வாகனம் ஒன்றில் 10 ஆடுகள் சட்டபூர்வமற்ற முறையில் கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் மஸ்கெலியா பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து அந்த வாகனத்தை பொலிசார் மடக்கி பிடித்தனர்.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட ஆடுகள் அனுமதி பத்திரம் இன்றியும் மிருக வதை சட்டத்துக்கு



மாறாகவும் மிருக வைத்திய அதிகாரி மூலம் வழங்கபடும் அனுமதி பத்திரம் இல்லாத நிலையிலேயே இவ் கைது இடம்பெற்றுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சந்தேக நபர்கள் மற்றும் வாகனத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## கஞ்சா பயிர் செய்கையினை ஊக்குவிக்க வேண்டும் என்ற கீழ்த்தரமான சிந்தனைக் கொண்டவர்தான் அமைச்சர் டயானா கமகே

சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்திற்கு என தனித்துவமான கலை கலாச்சாரம் உண்டு எமது மாவட்டத்தை பற்றி தர குறைவாக பேசுவதற்கு அமைச்சருக்கு எந்த அருகதையும் இல்லை. கஞ்சா பயிர் செய்கைனை ஊக்குவிக்க வேண்டும் என்ற கீழ்த்தரமான சிந்தனைக் கொண்டவர்தான் அமைச்சர் டயானா கமகே என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார். சுற்றுல்லாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்தைத் தொடர்ந்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் இதைக் கண்டித்து ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்தியில், முதலில் நான் மன்னார் மாவட்டத்தை தரகுறைவாக பேசிய அமைச்சர் டயானா கமகேக்கு எனது கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டத்தை தரகுறைவாக பேசி இருந்தார்.

மன்னார் மாவட்டத்திற்கு என தனித்துவமான கலை கலாச்சாரம் உண்டு எமது மாவட்டத்தை பற்றி தர குறைவாக பேசுவதற்கு அமைச்சருக்கு எந்த அருகதையும் இல்லை. அமைச்சர் பாராளுமன்ற அமர்வின் போது கஞ்சாவை இந்த நாட்டில் தடை செய்யக்கூடாது என்றும் அதை பயிர் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று முன்பு பேசி இருந்தார் இவர் இப்படியான கீழ்த்தரமான சிந்தனை கொண்டவர். இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் தகுதியுடையவர்களை அமைச்சுக்குநியமிக்கவேண்டும்இவரைப்போன்றதகுதி இல்லாத கீழ்த்தரமானவர்களை அமைச்சுக்கு நியமிக்க கூடாது. மன்னார் மாவட்ட கலைக் கலாச்சாரங்களை குழி தோண்டி புதைப்பதற்கு இந்த அமைச்சருக்கல்ல எவருக்கும் உரிமை கிடையாது இவரது கருத்துக்கு எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தால் மாவட்ட சாதனையாளர்களுக்கு கௌரவம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அண்மையில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபவர்களின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்று சாதனை படைத்த கல்முனை வலய பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் .சகுதுல் நஜீம் தலைமையில் இன்று (15.09.2022) மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மருதூர் கனி மண்டபத்தில் நடைபெற்றது. பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் மாவட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்ட நிந்தவூர் அல்– அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் ஏ.எஸ்.எம். சிம்ரன், உயிரியல் விஞ்ஞானம் ,பௌதீக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்களான ஏ.அஸ்மி அஹமட் , எம். ஆர்.எம். சிமர், விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி அலியார் நசீஹா உட்பட மாவட்டத்தில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற 10 மாணவர்கள் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கிய மாலை அணிவிக்கப்பட்டு பெற்றோர்கள் முன்னிலையில் பாடசாலை அதிபர்களின் பங்கு பற்றுதலோடு கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதம கணக்காளர் ஏ.எம். றபீக், உள்ள பிரதி கணக்காய்வாளர் வி.சேகர், கல்முனை வலய கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச்.எம். பௌசர், எம்.எச்.எம்.ஜாபிர், திருமதி ஜிஹானா ஆலிப், உதவி கல்வி பணிப்பாளர் ஏ.பி.நஸ்மியா ஸனூஸ், கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.எம்.சம்சம் உட்பட பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், என பலர் இதில் கலந்து கொண்டனர்.